தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 122/பேரூ/2022

நாள் 21.09.2022

திரு. R. மயில்சாமி
புதுவிளாங்குடி, மதுரை மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பரவை பேரூராட்சி, மதுரை மாவட்டம் ... எதிர்மனுதாரர்

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, பிளாட் எண்.5 அய்யப்பன்தெரு, செம்பருத்திநகர் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. ஆர். மயில்சாமி என்பவரின் 30.07.2022 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.08.2022ல் பெறப்பட்டு, 122/2022என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, பிளாட் எண்.5 அய்யப்பன்தெரு, செம்பருத்திநகர் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. ஆர். மயில்சாமி தமது 30.07.2022 நாளிட்ட புகார் மனுவில் மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், பரவை பேரூராட்சிக்குட்பட்ட பஸ் நிறுத்தத்திலிருந்து மேற்கே செல்லும் நடைமேடை இரண்டு பக்கங்களிலும் கிழக்கே செல்லும் இரண்டு நடைமேடைகளிலும் பாதாசாரிகள் நடந்து செல்ல முடியாதவாறு நான்கு நடைமேடைகளையும் ஆக்கிரமிப்பு செய்திருப்பதால், நடந்து செல்பவர்கள் தேசிய நெடுஞ்சாலையில் நடந்து செல்லவேண்டியுள்ளதென்றும், இரவு நேரங்களில் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அனைவரும் மிகவும் கிரமப்படுகின்றனர். மேலும், தேசிய நெடுஞ்சாலையை நடந்து செல்பவர்கள் பயன்படுத்தும்போது விபத்துக்களும் ஏற்படுகின்றன. மேலும், தேசிய நெடுஞ்சாலையிலிருந்து வடக்கே காந்திசிலை வரையிலும் சாலையின் இருபுறங்களிலும் வணிகர்கள் சாலையை ஆக்கிரமித்துள்ளனர். மேற்படி ஆக்கிரமிப்புகளை கண்கூடாக பார்த்தும், ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கத்

தவறிய செயல் அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுத்திடவும், ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும், இனிவரும் காலங்களில் ஆக்கிரமிப்புகள் ஏற்படாதவாறு பாதுகாத்திட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பரவை பேரூராட்சிக்கு உத்தரவிடுமாறும் கோரி இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் மனுவினை அளித்துள்ளார். மனுதாரர் தனது புகாருக்கான ஆதார ஆவணங்கள் மற்றும் புகைப்படங்களையும் தனது புகார் மனுவுடன் இணைத்தனுப்பிவைத்துள்ளார்.

2. பரவை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 06.09.2022 அன்று தூத்துக்குடி முகாம் நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ 02.09.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டும், மின்னஞ்சல் மற்றும் தொலைவழிச் செய்தி மூலமும் கேட்டுக்கொள்ளப்பட்டனர். முறையீட்டு மனுதாரர் 06.9.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் “மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், பரவை பேரூராட்சிக்குட்பட்ட பேருந்து நிறுத்தத்திலிருந்து மேற்கே செல்லும் நடைமேடையின் இரண்டு பக்கங்களிலும், கிழக்கே செல்லும் இரண்டு பக்க நடைமேடைகளிலும் பாதாசாரிகள் நடந்துசெல்ல முடியாதவாறு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன. தேதிய நெடுஞ்சாலையில் உள்ள மேற்கண்ட இடத்தில் இரவு நேரங்களில் நடந்துசெல்ல பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை மிகவும் சிரமப்படுகிறார்கள். அவ்வாறு நடந்து செல்வதற்கு தேசிய நெடுஞ்சாலையை பயன்படுத்தும்போது விபத்துக்களும் ஏற்படுகின்றன. அதேபோன்று, தேசிய நெடுஞ்சாலையில் இருந்து வடக்கே காந்திசிலை வரையிலும் சாலையின் இருபுறங்களிலும் வணிகர்கள் சாலையை ஆக்கிரமித்து கடைகளை நடத்தி வருகின்றனர். மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை உடனே அகற்றிடவும், இனிவரும் காலங்களில் ஆக்கிரமிப்புகள் ஏற்படாதவாறு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆவனசெய்யுமாறு இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

3. பரவை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. K. பூங்கொடிமுருகு மற்றும் வரித்தண்டலர் திரு. பி. கோபாலகிருஷ்ணன் ஆகியோர் 6.9.2022 அன்று தூத்துக்குடி முகாம் விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள வாக்குமூலத்தில் “மனுதாரர் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு பரவை பேரூராட்சி நெடுஞ்சாலையின் இருபுறங்களிலும் கடைகள் அமைந்துள்ளன. மேற்கண்ட கடைகளிலிருந்து வரிவசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகள் அமைந்துள்ள இடம் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடத்தில் அமைந்துள்ளதால், பேரூராட்சியால் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. எனினும் மனுதாரரின் கோரிக்கை தொடர்பாக நெடுஞ்சாலைத் துறைக்கு ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பாகவும், அதேபோன்று மனுதாரர் தெரிவித்துள்ள தேசிய நெடுஞ்சாலையிலிருந்து வடக்கே காந்தி சிலை வரையிலுமுள்ள கிராமச் சாலையிலும் (Union Road) சிலர் இடத்தை ஆக்கிரமித்து கடைகள் வைத்துள்ளனர். மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை சுட்டிக்காட்டி அவ்விடத்திற்கு அத்துமால் அளவீடு செய்து வழங்கும்படி வட்டாட்சியருக்கு 18.8.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட நெடுஞ்சாலைக்குச் சொந்தமான இடத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் தொடர்பாக 26.7.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில்

தெரிவித்துக்கொள்கிறேன். இவற்றின் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும் நெடுஞ்சாலைத் துறை மற்றும் காவல்துறை உதவியுடன் மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்றிட உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளனர்.

4. மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் அவரது வாக்குமூலம், பரவை பேரூராட்சி செயல் அலுவலரது வாக்குமூலம் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- பரவை பேரூராட்சிக்குட்பட்ட பஸ் நிறுத்தத்திலிருந்து கிழக்கு மற்றும் மேற்கே செல்லும் இரண்டு நடைமேடைகளின் இருபுறங்களிலும் பாதாசாரிகள் நடந்து செல்ல முடியாதவாறு நான்கு நடைமேடைகளும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருப்பதால், நடந்து செல்பவர்கள் தேசிய நெடுஞ்சாலையில் நடந்து செல்லவேண்டியுள்ளதென்றும், இரவு நேரங்களில் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அனைவரும் மிகவும் சிரமப்படுகின்றனர் என்றும், மேலும், தேசிய நெடுஞ்சாலையை நடந்து செல்பவர்கள் பயன்படுத்தும்போது விபத்துக்கள் ஏற்படுகின்றன என்றும், அதேபோல, தேசிய நெடுஞ்சாலையிலிருந்து வடக்கே காந்திசிலை வரையிலும் சாலையின் இருபுறங்களிலும் வணிகர்கள் சாலையை ஆக்கிரமித்துள்ளனர் என்றும், மேற்படி ஆக்கிரமிப்புகளை கண்கூடாக பார்த்தும், ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கத் தவறிய செயல் அலுவலர் மீது துறைரீதியான நடவடிக்கை எடுத்திடவும், ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும், இனிவரும் காலங்களில் ஆக்கிரமிப்புகள் ஏற்படாதவாறு பாதுகாத்திட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பரவை பேரூராட்சிக்கு உத்தரவிடுமாறும் தனது புகார் மனுவில் கோரியுள்ளார்.
- மனுதாரரால் முன்வைக்கப்பட்டுள்ள மேற்கண்ட புகார் குறித்து பரவை பேரூராட்சி செயல் அலுவலருக்கு 20.7.2022ல் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்புகள் அகற்றம் சம்மந்தப்பட்ட பிற துறைகளையும், காவல் துறை ஒருங்கிணைப்புடன், பொது மக்களுக்கு பாதிப்பு ஏதும் ஏற்படாதவாறு மேற்கொள்ளப்படவேண்டிய கூட்டு நடவடிக்கை ஆகும். பரவை பேரூராட்சி செயல் அலுவலருக்கு புகார் மனு அளிக்கப்பட்டு பத்து தினங்களில் அதாவது 30.7.2022ல் இம்முறைமன்ற நடுவத்திற்கு மனுதாரர் புகார் மனு அளித்துள்ளார் என்பது தெளிவாகிறது.
- பொது மக்கள் மற்றும் பாதாசாரிகள் ஆக்கிரமிப்பாளர்களால் அதிகம் பாதிக்கப்படுவதோடு, நெடுஞ்சாலையைக் கடக்கும் வாகன ஓட்டிகள் மற்றும் சாலையைக் கடப்பவர்களுக்கும் அச்சுறுத்தல் மற்றும் உயிர் பயம் நிலவுவதாக மனுதாரரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.
- பரவை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள வாக்குமூலத்தில் பரவை பேரூராட்சி நெடுஞ்சாலையின் இருபுறங்களிலும் அமைக்கப்பட்டுள்ள கடைகளிலிருந்து வரிவசூல் செய்யப்பட்டு வருகிறது என்றும், எனினும் கடைகள் அமையப்பெற்றுள்ள இடம் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடமென்பதால்,

பேரூராட்சி நிர்வாகத்தினால் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

- அதேபோன்று தேசிய நெடுஞ்சாலையிலிருந்து வடக்கே காந்தி சிலை வரையிலுள்ள கிராமச் சாலையிலும் (Union Road) சிலர் இடத்தை ஆக்கிரமித்து கடைகள் வைத்துள்ளனர் என்றும், ஆக்கிரமிப்புகளைச் சுட்டிக்காட்டி அவ்விடத்தினை அத்துமால் செய்து வழங்கிடுமாறு வட்டாட்சியருக்கு 18.8.2022ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பாக 26.7.2022ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், நெடுஞ்சாலைத் துறை மற்றும் காவல்துறை உதவியுடன் ஆக்கிரமிப்புகளை அகற்றிட உடன் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் பரவை பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

5. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், மதுரை மாவட்டம், பரவை பேரூராட்சிக்குட்பட்ட பேருந்து நிறுத்தத்திலிருந்து கிழக்கு மற்றும் மேற்கே செல்லும் நடைமேடைகளின் இருபுறமும் பாதசாரிகள் நடக்க இடையூறாக உள்ள தெரு கடைகள், டீ கடைகள், உணவகங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாலும், மேற்கண்ட கடைகள் அமைந்துள்ள இடம் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடத்தில் அமைந்துள்ளதாக பரவை பேரூராட்சி செயல் அலுவலரால் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், பொதுமக்களின் நலன் கருதி, ஆக்கிரமிப்புகள் அனைத்தையும் உடனடியாக அகற்றிட நெடுஞ்சாலைத்துறைக்கு உரிய உத்தரவுகளை பிறப்பிக்குமாறு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். ஆக்கிரமிப்புகள் யாவும் தற்காலிகமானவைகளே என்பதால், உடனடியாக இதில் முனைப்புடன் ஈடுபட்டு ஆக்கிரமிப்புகளை அகற்றியும், இனிவரும் காலங்களில் ஆக்கிரமிப்புகள் ஏற்படாதவாறு பொதுமக்களும், ஆக்கிரமிப்பாளர்களும் அறியும் வண்ணம் பொது அறிவிப்பினையும், ஒலிபெருக்கியின் மூலம் அறிவிப்பு செய்தும், பொதுமக்கள் மற்றும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுமாறு ஆக்கிரமிப்புகள் அற்ற பகுதி மீறுவோர் தண்டிக்கப்படவும், கடைகள் எந்தநேரமும் முன்னறிவிப்பின்றி அகற்றப்படும் என்ற அறிவிப்புப் பலகையை நெடுஞ்சாலைத் துறை மூலம் நிறுவிட உரிய அறிவுறுத்தங்களை சம்மந்தப்பட்ட நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளருக்கு உத்தரவிடுமாறும் மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

அதே போன்று, மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய நெடுஞ்சாலையிலிருந்து வடக்கே காந்தி சிலை வரையிலுமுள்ள கிராமச் சாலைகளில் (Union Road) சிலரால் ஆக்கிரமிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ள கடைகளை அகற்றிடவும் மனுதாரர் கோரிக்கை விடுத்துள்ள நிலையில், பொதுச் சாலை அல்லது பொது இடம் அல்லது அதன் பகுதி எதனிலுமோ பண்டம் எதனையும் விற்பனை அல்லது விற்பதற்காக வைத்திருப்பதை பொது அறிவிப்பு அல்லது உரிமத்தின் வாயிலாக தடை செய்யலாம் அல்லது ஒழுங்குமுறைப்படுத்தலாமென்று தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 270ன்படி ஆணையருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதால், மேற்கண்ட சட்டம் பேரூராட்சிகளுக்கும் பொருந்துமென்பதால், மேற்படி அதிகாரத்தின் அடிப்படையில் ஆக்கிரமிப்புகளை அகற்றிட பரவை பேரூராட்சி செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

ஆக்கிரமிப்புகளை அகற்றும்போது வட்டார வளர்ச்சி அலுவலர், காவல்துறையுடன் இணைந்து, உரிய வழிமுறைகளின்கீழ் ஆக்கிரமிப்புகளை இரண்டுமாத காலத்திற்குள் முற்றிலுமாக அகற்றிடவும், ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டவுடன், மீண்டும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாமல் இருக்க, தடுப்பு நடவடிக்கைகளையும் பின்பற்றி பொது இடங்களில் பொது மக்களுக்கு இடையூறு நிகழாவண்ணம் கண்காணிக்குமாறும் அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது. ஆக்கிரமிப்புகள் அகற்றம் குறித்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை கண்காணிக்குமாறு மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

2022ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 21ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/– x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. R. மயில்சாமி,
பிளாட் எண்.5, அய்யப்பன் தெரு, செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி, மதுரை–18
செயல் அலுவலர், பரவை பேரூராட்சி, பரவை, மதுரை மாவட்டம்–625 402
மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை மாவட்டம், மதுரை.
உதவி கோட்டப் பொறியாளர், மதுரை மேற்கு (நெ) உட்கோட்டம், மதுரை.
பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர், மதுரை மண்டலம், மதுரை

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

26/9/22
செயலாளர்
22.9.22